# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:173** **தேதி:30.09.2014**

## தேசிய கவுன்சில் முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

மனித வள இயக்குனர் திரு A.N. ராய் அவர்களின் தலைமையில் 25.09.2014 அன்று நடைபெற்ற தேசியக் கவுன்சில் கூட்டத்தில், நிர்வாக தரப்பு இதர உறுப்பினர்க்ளோடு, ED(FINANCE) ஆக உள்ள திருமதி சுஜாதா தபன் ரே அவர்களும் கலந்துக் கொண்டார்.

காஷ்மீர் வெள்ளத்தில் இறந்த மக்களுக்கு ஒரு நிமிடம் அமைதியாக இருந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட காஷ்மீர் ஊழியர்களுக்கு மூன்று மாத ஊதியத்தை முன்பணமாக வழங்க வேண்டும் என ஊழியர் தரப்பில் கடுமையாக கோரப்பட்டது. மனித வள இயக்குனர் இதனை ஏற்றுக் கொண்டார்.

தனது துவக்க உரையில் ஊழியர் தர்ப்பு செயலாளர் தோழர் P.அபிமன்யு பின்வருவனவற்றை எழுப்பினார்.

அ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காஷ்மீரில் பாதிக்கப்பட்ட BSNLன் சேவைகளை விரைவில் சீரமைத்த ஊழியர்களையும் நிர்வாகத்தையும் பாராட்டினார். தனியார் கம்பெனிகளைக் காட்டிலும் மிக விரைவாக BSNL தனது சேவைகளை சரி செய்துள்ளது.

ஆ) ஆயுத பூஜைக்கு முன்பாக ஒரு மாத சம்பளத்தை இடைக்கால PLIஆக வழங்க வேண்டும் எனவும் கோரினார்.

இ) கார்ப்பரேட் அலுவலகத்தின் SR பகுதியில் “ஆர்ப்பாட்டம், தர்ணா, உள்ளிட்டவைகளுக்கு தடை செய்ய வழங்கப்பட்ட உத்தரவை வன்மையாக கண்டித்தொடு மட்டுமின்றி, அதனை உடனடியாக திரும்பபெற வலியுறுத்தினார்.

ஈ) JACஆல் எழுப்பப்பட்ட 30 அம்ச கோரிக்கைகளை தீர்த்து வைப்பதில் நிர்வாகத்தின் செயலின்மை தொடர்பாக தனது கடும் அதிருப்தியை தெரிவித்தார்.

உ) கேரளா தலைமை பொது மேலாளரின் பழி வாங்கும் போக்கோடு கூடிய பிடிவாதத்தின் காரணமாக, கேரளா மாநிலத்தில் சீர்குலைந்துக் கொண்டிருக்கும் நிலையினை தடுத்து நிறுத்த CMD உடனடியாக தலையிட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

ஆய்படு பொருட்களை விவாதிக்கும் முன்னர், ஒரு மாத ஊதியத்திற்கு இணையான இடக்கால PLIஐ உடனடியாக வழங்க வேண்டும் என ஊழியர் தரப்பு உறுதியுடன் கோரியது. நிர்வாகம் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஒட்டு மொத்த ஊழியர் தரப்பும் நிர்பந்தம் செலுத்தியது. எனினும் அது ஏற்றுக் கொள்ளப்பட வில்லை.

GM (Estt) அவர்கள், JACன் கோரிக்கைகளை மேற்கோள் காட்டி,"01.01.2007 அன்று அல்லது அதற்கு பின் பணியிலமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு அவர்களது சம்பள இழப்பை ஈடுகட்ட ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய் உயர்வு வழங்கலாம்" என்ற ஆலோசனையை விரைவில் நிர்வாக கமிட்டியின் முன் வைக்கபடுமென கூறினார். இந்த ஆலோசனை சம்பள இழப்பை ஈடுகட்டாது என்று பதிலளித்தனர். நிர்வாகம் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும், அவர்களது ஊதிய் இழப்பு முழுமையாக ஈடுகட்டும் வரை இந்த பிரச்சனையை கையில் எடுத்துக் கொண்டே இருப்போம் என உறுதி படக் கூறினர்.

அதன் பின் ஆய்படு பொருட்களின் மீது விவாதம் நடைபெற்றது:

1) 78.2% IDA இணைப்பிற்கு ஆதரவாக ஊதிய விகித மாற்றம்:- தற்போதுள்ள சம்பள விகிதம் 68.8% IDA இணைப்பிற்கு ஏதுவாக உருவாக்கப்பட்டதேயன்றி 78.2% IDA இணைப்பிற்காக அல்ல என்றும் அதனால் பெரிய அளவிலான ஊழியர்களுக்கு STAGNATION வருகிறது என்றும் ஊழியர் தரப்பில் கறாராக சுட்டிக்காட்டப் பட்டது. எனவே 78.2% IDA இணைப்பிற்கு ஏதுவாக சம்பள விகிதங்களை மாற்றி அமைப்பது என்பதே தீர்வாகும் என வலியுறுத்தினர். எனினும் நிர்வாகம் இதனை ஏற்றுக் கொள்ளாமல் இது அடுத்த ஊதிய மாற்றத்தின் போதுதான் செய்ய முடியும் என்று கூறினர்.
2) ERP அறிமுகப்படுத்துவதால் சந்திக்கும் சிரமங்கள்:-கர்நாடகாவிலும், டெலிகாம் ஸ்டோரிலும் ERP அறிமுகப்படுத்தும்போது ஊழியர்களும், BSNL சேவைகளும் சந்தித்த சிரமங்கள் குறித்து ஊழியர் தர்ப்பு புகார் அளித்து எதிர்காலத்தில் இது மீண்டும் ஏற்படக்கூடாது என ஊழியர் தரப்பில் கோரினர். இதற்கு தேவையானவற்றை செய்ய நிர்வாக தர்ப்பு உறுதி அளித்துள்ளது.
3) BSNLல் ABSORB செய்யப்பட்ட ஊழியர்களுக்கு விதி 55(i) மற்றும் 55(ii) b:- மருத்துவ காரணங்களால் ஒரு ஊழியருக்கு கட்டாய ஓய்வு கொடுக்கலாம் என்று சொல்லக்கூடிய CDA சட்ட விதி 55(i) மற்றும் 55 வயதான் ஊழியருக்கு நிர்வாகம் கட்டாய ஓய்வு கொடுக்கலாம் என்று சொல்லக்கூடிய CDA சட்ட விதி 55(ii) b ஆகிய விதிகள் BSNLல் ABSORN செய்யப்பட்ட ஊழியர்களுக்கு பொருத்தக்கூடாது என ஊழியர் தரப்பு கோரியதை நிர்வாக தரப்பு ஏற்றுக் கொள்ள வில்லை.
4) GPF பட்டுவாடாவிற்கு நிதி ஒதுக்காதது:- GPF பட்டுவாடாவிற்கான நிதி ஒதுக்காதது தொடர்பாக ஊழியர் தரப்பு கடுமையாக குற்றம் சாட்டியது. CCAக்கள் மூலம் நேரடியாக DOT நேரடியாக தரலாம் என்ற ஆலோசனையை நிர்வாக தரப்பு முன்வைத்தது. மேலும் பல் சிக்கல்களை இது உருவாக்கும் என்பதால் ஊழியர் தர்ப்பு அந்த ஆலோசனையை நிராகரித்தது. BSNL கார்ப்பரேட் அலுவலகமே GPF பட்டுவாடாவிற்கான நிதியை காலத்தே ஒதுக்க வேண்டும் என ஊழியர் தரப்பு வலியுறுத்தியது.

5) BSNL MRS திட்டத்தில் சகோதார சகோதரிகளை சார்ந்துள்ளவர்களாக இணைத்துக் கொள்வது:- CS(MA) திட்டத்தின் அடிப்படையில் BSNL MRS திட்டத்தில் சார்ந்துள்ளவர்கள் என வரையறை செய்யப்பட்டவர்களில் சகோதர சகோதரிகளையும் இணைக்க வேண்டும் என ஊழியர் தர்ப்பில் கோரப்பட்டது. இதனை பரிசீலிக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

6) குறைந்தபட்சமாக ஓய்வூதியதாரர்களுக்கு மட்டிலுமாவது மருத்துவப் படி:- இந்த கோரிக்கையை பரிசீலிக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

7) மாற்றல் கொள்கையில் மாற்றம்:- கிராமப்புறங்களுக்கும், ஊழியர்கள் செல்ல விரும்பாத ஊர்களுக்கும் மாற்றலில் சென்றுள்ள ஊழியர்களை ஓரிரு வருடங்களுக்குள் பழைய இடங்களுக்கு மாற்றல் கொடுக்க வேண்டும் என்ற ஊழியர் தரப்பின் கோரியது. இதனை பரிசீலிக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

8) மாற்றலில் இருந்து விலக்களிப்பதில் உள்ள பாரபட்சம் களையப்பட வேண்டும்:- தற்போது ஊழியர் சங்கங்களின் தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு மாற்றலில் இருந்து விலக்களிப்பது என்பது ஒரு வருடமாக உள்ளது. அங்கீகார காலம் தற்போது 3 வருடங்களாக உயர்த்தப்பட்டதாலும், அதிகாரிகளுக்கு இது 3 வருடங்களாக இருக்கின்ற காரணத்தாலும், ஊழியர்களின் தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு வழங்கப்படும் மாற்றலில் இருந்து விலக்களிப்பது என்பது 3 வருடங்களாக இருக்க வேண்டும் என ஊழியர் தர்ப்பு கோரியது. இதனை சாதகமாக பரிசீலிக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

9) LIC பாலிஸி தொகையை உயர்த்துவது:- 01.01.2007 முதல் ஊதியம் உயர்ந்துள்ள அடிப்படையில், LIC பாலிஸி தொகையை தற்போது உள்ள ரூ.525/-, ரூ.315/- மற்றும் ரூ.105/- என்பதை உயர்த்த வேண்டும் என்றும், இதனை LICயுடன் விவாதிக்க வேண்டும் என்றும் ஊழியர் தரப்பில் கோரப்பட்டது. நிர்வாக தரப்பு இதனை ஏற்றுக் கொண்டது.

10) GRADE IV பதவி உயர்விர்கு பதிலாக வழங்கப்படும் ஒரு கூடுதல் இன்கிரிமெண்டை மீண்டும் வழங்க வேண்டும்:- இந்த பிரச்சனையில் நீண்ட விவாதம் நடைபெற்றது. இது தொடர்பாக தனியாக விவாதிக்கவும், அதில் தீர்வு ஏற்படவில்லை எனில், அடுத்த தேசிய கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

11) கவுன்சில்களுக்கான உப விதிகள் (BYE-LAWS) உருவாக்கப்படுவது:- JCM அமைப்பு சட்டத்தின் அடிப்படையில் நிர்வாக தரப்பில் நகல் ஒன்று உருவாக்கப்பட்டு, ஊழியர் தரப்புடன் விவாதிக்க ஏற்றுக் கொள்ளப்பட்டது.

12) டெலிகாம் ஃபேக்டரிக்கு சான்றிதல் வழங்குவதில் QAவின் அதீத காலதாமதம்:- புதிய CLIP கருவிகள் உள்ளவற்றை தயாரிக்க டெலிகாம்ஃபேக்டரிகளுக்கு சான்றிதழ் வழங்குவதில் QA தேவையற்ற காலதாமதம் செய்வதாக ஊழியர் தர்ப்பு சுட்டிக் காட்டியது. இந்த பிரச்சனை தீர்வு காணப்படும் என நிர்வாக தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

13) & 16) ஊழியர்களை இரண்டாவது சீரமைப்பது மற்றும் பன்முக தன்மை ஊழியர்களை உருவாகுவது:- புதிய தொழில் நுட்பம், பணித்தன்மையில் மாற்றம் உள்ளிட்டவைகளின் காரணமாக ஊழியர் தரப்புடன் கலந்தாலொசித்து ஊழியர்களை இரண்டாவது முறையாக மறுசீரமைப்பு செய்ய வேண்டுமென ஊழியர் தர்ப்பு கோரியது. அதற்கான காலம் கனியவில்லை என்றும் பொருத்தமான நேரத்தில் இது பரிசீலிக்கப்படும் என நிர்வாகம் பதிலளித்துள்ளது.

14) நகரங்களை சீரமைப்பது:-மக்கள் தொகை அடிப்படையில் கறாராக நகரங்களை மேல்நிலைப்படுத்த வேண்டும் என ஊழியர் தரப்பு கோரியது. அகமதாபாத், வேலூர், நெல்லூர் உள்ளிட்ட நகரங்களின்ன் பிரச்சனை தேங்கி உள்ளது என்பதை சுட்டிக்காட்டப்பட்டது. செலவினங்களுக்கான இலாகா தான் இதை செய்ய முடியும் என நிர்வாகம் கூறியது. ஊழியர் தரப்பின் நிர்பந்தத்தின் பேரில் இந்த பிரச்சனைகளின் மீது மேல் நடவடிக்கை எடுக்க தொலை தொடர்பு துறைக்கு அனுப்ப நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

15) தொழிற்சாலை கேடர்களை மறு சீரமைப்பது:- டெலிகாம் ஃபேக்டரி தலைமை பொது மேலாளர்களிடம் ஆலோசனை செய்து பதவிகளை மேல் நிலைப்படுத்த 26ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் தலைவர் உறுதி அளித்ததை நினைவு படுத்திய ஊழியர் தரப்பு தற்போது அந்த பிரச்சனை கார்ப்பரேட் அலுவலகத்தில் தேங்கி உள்ளதாக புகார் கொடுத்தனர். நிர்வாக தரப்பின் பதில் திருப்தி அளிக்காததால் விரைவில் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என ஊழியர் தரப்பில் வற்புறுத்தினர்.

17) LIC மூலமான விடுப்பை காசாக்கும் திட்டத்தில் மரணத்தின் போது அதிகமான பயன்:-ஊழியர் தரப்போடு கலந்தாலோசிக்காமல் இந்த திட்டம் LICஉடன் நிர்வாகம் இறுதிப்படுத்தப் பட்டதை சுட்டிக்காட்டிய ஊழியர் தரப்பு ஊழியர் தரப்பையும் உள்ளடக்கி மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என கோரியது. நிர்வாகம் இதனை ஏற்றுக் கொண்டது.

18) பல்வேறு மாநிலங்களில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையையின் அடிப்படையில் ராஜ்பாஷா அதிகாரி பதவிகளை ஒதுக்கீடு செய்வதும் அந்த கேடருக்கான புதிய தேர்வு விதிகளை அறிமுகப்படுத்துவதும்:- நிர்வாகம் இந்த பிரச்சனையை கவனிப்பதாக உறுதி அளித்துள்ளது.

19) TM, TTA, JTO மற்றும் JAO தேர்வுகளில் உள்ள NEGATIVE மதிப்பெண் முறையை கைவிட வேண்டும்:- நிர்வாகம் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

டிசம்பர், 2014ல் அடுத்த கூட்டத்தை நடத்த இருதரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்.**